# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதாரணக்கூட்டம் தனிஅலுவலரால் 31.08.2021ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**பொருள்: 102**

தேவகோட்டை நகராட்க்கு சொந்தமான வாடியார் வீதி கடை மற்றும் பேருந்துநிலைய புதிய கடை ஆகியவற்றிற்கு 01.01.2018 மற்றும் 01.04.2018 முதல் வாடகை நிர்ணயம் செய்து இழப்பு ஏற்படாவண்ணம் 01.01.2018 மற்றும் 01.04.2018 வரை வாடகை நிர்ணயம் செய்து வசூல் செய்யவும், கணிணியில் கோப்பு எழுப்ப மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் வாடியார் வீதி கடை மற்றும் பேருந்துநிலைய கடை ஆகியவற்றிற்கு கீழ்காணும் விபரப்படி வாடகை நிர்ணயம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | 110/53022 | வாடியார் வீதி – திரு.ரவிச்சந்திரன் கடை – பழைய வாடகை ரூ.3312/– | 6300/– |
| 2 | 110/71019 | பேருந்துநிலையம் – திரு.பூமிநாதன் புதிய கடை – பழைய வாடகை ரூ.2415/– | 5050/– |
| 3 | 110/71020 | பேருந்துநிலையம் – திரு.பூமிநாதன் புதிய கடை – பழைய வாடகை ரூ.2898/– | 5280/– |

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 102**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 103**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் இனங்கள் கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஒப்படைக்கப்பட்டவை மற்றும் ஏலம் போக இனங்களின் விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| | | |
|---|---|---|
| 1 | பேருந்து நிலைய பஸ் கட்டணம் வசூல் உரிமம் (துரை மூலம் வசூல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது) | 2021–2022–ம் ஆண்டுக்கு தொகை செலுத்தப்படாமல் 07.06.2021 முதல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| 2 | கருதாவூரணி மீன் பிடித்தல் | 2021–2022–ம் ஆண்டுக்கு தொகை செலுத்தப்படாமல் 09.07.2021 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மேற்படி பணியினை மீன்பிடி காலத்தில் மேல் நடவடிக்கை எடுக்கலாம்.) |
| 3 | சாலையோர மரங்களின் மேற்பலன்கள் | குத்தகை எடுக்க முன் வராத காரணத்தினால் பலன் தரும் காலத்தில் மேல் நடவடிக்கை தொடரலாம். |

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 103**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 104

தேவகோட்டை நகராட்சியில் நடைபெறும் சிறப்பு சாலைத் திட்டம் 2020–2021 தார் சாலை அமைக்கும் பணிக்கு மூன்று சிப்பங்களாக பணி மேற்கொள்ளபட்டதில் பணிக்கு பயன்படுத்தப்படும் பொருள்களின் உறுதி தன்மை மற்றும் முடிவுற்ற பணிகளை சோதனை மேற்கொள்ள Third Party Inspection செய்ய வேண்டியதற்கு Dr.G.இளங்கோவன், டீன், பட்டுக்கோட்டை அண்ணா பல்கலைக்கழகம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் அவர்களிடம் இருந்து ரூ.90,000/– த்திற்கான கேட்பு வரப்பெற்றுள்ளது. அதன்பேரில் ரூ.90,000/– த்திற்கான செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 104**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 105

தேவகோட்டை நகராட்சியின் ஈப்பு வாகனம் TN63 AS 1648 வாகனத்தின் கேபிள் மற்றும் டோர்கள் அனைத்தும் டிங்கரிங் செய்து பெயிண்டிங் வேலைகள் செய்ய 23.07.2021 அன்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. மேற்படி விலைப்புள்ளி அறிவிப்பினபடி கீழ்காணும் விலைப்புள்கிள் வரபெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி. | 60,000/– |
| 2 | பிரபு குமார் ஆட்டோ மொபைல்ஸ், காரைக்குடி. | 61,950/– |
| 3 | ரவி ஆட்டோ கேரேஜ், காரைக்குடி. | 63,000/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்: 105**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 106

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்களுக்கு பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள தேவையான உபகரணங்கள் மற்றும் தளவாடப் பொருள்கள் வரும் மழைக்காலங்களை எதிர்கொள்ளும் வகையில் இருப்பில் வைத்துக்கொள்ளவும் இந்நகர் 27 வார்டு பகுதிகளிலும் பொது சுகாதாரப்பணிகள் பாதிப்படையாமல் பணி மேற்கொள்ளவும் துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி வாங்க வேணடியுள்ளது.

**தேவையான பெருள்கள்:–**

1) தெரு கூட்டுமார் – 100 எண்ணம்
2) அலுமினிய கூடை – 100 எண்ணம்
3) மண் வெட்டி – 30 எண்ணம்
4) அரிவாள் – 30 எண்ணம்

5) லாரி கொக்கி ( 4 பல்) – 30 எண்ணம்
6) தென்னை துடப்பம் – 200 எண்ணம்
7) இரும்பு வாளி (10லி) – 15 எண்ணம்
8) பிளாஸ்டிக் குடம் – 20 எண்ணம்
9) ஒளிரும் சட்டைகள் – 50 எண்ணம்

மேற்கண்ட விபரப்படியான பொருள்களை வாங்கி பணி மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி பொதுமக்களின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் உடன் விலைப்புள்ளி பெற்று மேல் நடவடிக்கை தொடர அதற்காகும் செலவு துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.2,50,000/– த்திற்கு செலவு மேற்கொள்ளவும் பணியின் மேல் நடவடிக்கை தொடரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குறைவான விலைவிகிதங்கள் வழங்கும் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 106**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 107

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் 45 DBC பணியாளர்கள் மூலம் இந்நகர் 27 வார்டு பகுதிகளிலும் உள்ள வீடுகள், வணிக வளாகங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் தினந்தோறும் ஆய்வு மேற்கொண்டு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி பணிக்கு தேவையான இரசாயன வேதிப்பொருள்கள் (கெமிக்கல்ஸ்) இருப்பில் குறைவாக உள்ளதால் கீழ்காணும் விபரப்படி தேவையான பொருள்களை வாங்கி வழங்க துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளார் அதன்படி

**தேவையான பெருள்கள்:–**

1) அபேட் – 500 லிட்டர்
2) பைரித்திரம் – 100 லிட்டர்
3) மாலித்தியான் – 100 லிட்டர்
4) P.T. Powder – 150 கிலோ

மேற்காணும் பொருள்களை வாங்கி இருப்பில் வைக்கவும், பணியின் அவசர அவசியம் கருதி பொதுமக்களின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் உடன் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.8,00,000/– த்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குறைவான விலைவிகிதம் வழங்கும் நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்று விநியோக உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 107**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.